# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு 24.11.2018 (முற்பகல் மற்றும் பிற்பகல்) அன்று நடைபெறவுள்ள புள்ளியியல் ஆய்வாளர் பதவிக்கான தேர்வை கஜா புயலால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் தொடர் மழை காரணமாக விண்ணப்பித்துள்ள தேர்வர்களின் நிலையினை கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் ஒத்திவைக்க தேர்வாணையம் முடிவு செய்துள்ளது. இத்தேர்வு நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலும் கூட்டுறவு சங்கங்களுக்கான இளநிலை ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 21.11.2018-லிருந்து 28.11.2018 வரையும் தேர்வுக் கட்டணம் செலுத்த இறுதி நாள் 30.11.2018 வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(க. நந்தகுமார்)
செயலாளர் மற்றும் தேர்வு
கட்டுப்பாட்டு அலுவலர் (பொறுப்பு)